<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>

<u>இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு, ஏப்ரல் 2012</u>

<u>செய்திக்குறிப்பு</u>

'சமச்சீர் கல்வி முறை தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏப்ரல் 2012 முதல் நடைபெறவுள்ள இடைநிலைக் கல்வி பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து நேரடித் தனித்தேர்வர்களும் (Direct Private Candidates appearing SSLC Public Examination for the first time) அறிவியல் செயல்முறை பாடத்திற்கு வருகை புரிய வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து நேரடித் தனித்தேர்வர்களுக்கும் அறிவியல் பாடத்திற்கான செய்முறை பயிற்சி வகுப்புகள் நடத்துதல் இன்றியமையாததாகிறது. இதற்காக, தேர்வர்கள் தங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ள அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களை சமர்ப்பித்திடல் வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளுக்கு சென்று செய்முறை வகுப்புகளில் கலந்துகொள்ளுதல் வேண்டும். செய்முறை வகுப்புகளில் கலந்துகொண்ட தேர்வர்கள் மட்டுமே மார்ச் 2012–ல் நடைபெறவுள்ள இடைநிலைக் கல்வி பொதுத்தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். செய்முறை வகுப்புகளில் கலந்துகொள்ளாத தேர்வர்களின் விண்ணப்பம் மார்ச் 2012–ல் நடைபெறவுள்ள இடைநிலைக் கல்வி பொதுத்தேர்வுக்கு ஏற்க இயலாமல் நிராகரிக்கப்படும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களை தொடர்பு கொள்ளுமாறு தேர்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கான விண்ணப்ப படிவத்தினை கீழ்கண்ட இணையதளங்களில் காணலாம்.

1. www.dge1.tn.nic.in , www.dge2.tn.nic.in , www.dge3.tn.nic.in
2. www.pallikalvi.in

விண்ணப்பப் படிவத்தினை 01.12.2011 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து விவரங்களை இரண்டு நகல்களில் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களிடம் தேர்வர்கள் 16.12.2011–க்குள் நேரில் ஒப்படைத்திடல் வேண்டும்.'

**இயக்குநர்**